



தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் சாரல் மழை பெய்து வருவதால் அனைத்து அருவிகளிலும் தண்ணீர் வரத்து அதிகரித்து காணப்பட்டது. விடுமுறை தினமான நேற்று ஏராளமான சுற்றுலா பயணிகளும் பொதுமக்களும் குளித்து மகிழ்ந்தனர்.

# பாரா மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அளவிலான 4வது அமர்வு கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகள்



**ஈரோடு செப்.01-**

4வது தேசிய அளவிலான( Para ) பாரா மாற்றுத்திறனாளிகளுக்கான அமர்வுக் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகள்ஆகஸ்டு, 15, 16 & 17, அன்று தமிழ்நாடு விளையாட்டுப் பல்கலைக்கழகம், வண்டலூர், சென்னையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வை இந்திய அமர்வுக் கிரிக்கெட் சங்கம் இணைந்து நடத்தியது. இதில் 9 அணிகள் பங்கேற்றன. ( தமிழ்நாடு, புதுச்சேரி, ஆந்திரா பிரதேசம் , ஒடிஸா, உத்தர் பிரதேசம், கர்நாடகம், சத்தீஷ்கர், குஜராத் மற்றும் ராஜஸ்தான் ) முதல் இடத்தை தமிழ்நாடு, இரண்டாம் இடத்தை கர்நாடகம், மூன்றாம் இடத்தை ஒடிஸா மற்றும் நான்காம் இடத்தை ஆந்திரா பிரதேசம் வென்றது. ஜாயின் ஹேன்ஸ் சோசியல் வெல்பேர் ட்ரஸ்ட், தலைமை நிர்வாகிகள் குமரேசன் மற்றும் ராஜேஷ் குமார் இந்த தொடரை சிறப்பாக நடத்தி கொடுத்தனர்.

இதற்கு உறுதுணையாக இந்திய அமர்வுக் கிரிக்கெட் சங்க நிர்வாகிகள் பால அரிதாஸ், , முகம்மது கதாபி, . சீனிவாசன், . முனீஸ்வரன், நவாஸ் ஷேரிப், . பார்த்திபன், முத்துக்குமரன், . வெங்கடேசன், . சுபாஷ் மற்றும் . சந்துரு ஆகியோர் செயல்பட்டனர்.

இதில் தேசிய அளவிலான நடைபெற்ற போட்டிகளில் கோப்பையை வென்று தமிழ்நாடு அமர்வுக் கிரிக்கெட் அணி தொடர்ந்து நான்காவது முறையாக தொடர்ச்சியாக வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளனர் இத்தகவலை இந்திய அமர்வு கிரிக்கெட் சங்கத்தின் தேசிய துணைத் தலைவரும் நந்தா கலை அறிவியல் கல்லூரியின் உடற்கல்வி இயக்குனருமான தேவகாந்தன் இத்தகவலை தெரிவித்தார்.

# ஈரோட்டில் மனைவி நல வேட்பு விழா



**ஈரோடு செப்.01-**

வேதாத்திரி மகரிஷியால் தோற்றுவிக்கப்பட்ட சமுதாய சேவா சங்கத்தில் பெண்களின் பெருமையைப் போற்றும் விதத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு 30-ம் தேதி அன்று மனைவி நல வேட்பு நாள் என்று சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

இவ்விழாவில் மனைவியை கௌரவிக்கும் விதமாக கணவர்கள் தங்களது மனைவிக்கு மலர் கொடுத்தும், மனைவிமார்கள் தங்களது கணவருக்கு கனி கொடுத்தும் வாழ்த்துவார்கள். நேற்று முன்தினம் ஈரோடு மனவளக்கலை மன்றம் சார்பில் இவ்விழா கொங்கு கலை அரங்கில் நடைபெற்றது. மனைவி நல வேட்பு அறிமுகவுரை நிகழ்த்தி காந்தப் பரிமாற்ற தவம் முதுநிலை பேராசிரியர் எம் சதாசிவம் நடத்தி வைத்தார்கள்.சிறப்புரையாக தென்காசி பேராசிரியர் இராமச்சந்திரன், அவர்கள் “மந்திர உறவு” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். விழாவில் 300 தம்பதியர் உட்பட சுமார் 750-க்கும் மேற்பட்ட அன்பர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் ஆசிரியர் திறன் மேம்பாட்டு பயிற்சியின் நிறைவு விழா



**ஈரோடு செப்.01-**

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் இளநிலை வணிக மேலாண்மை மற்றும் கணினி பயன்பாட்டுத்துறை சார்பாக அகில இந்திய தொழில்நுட்ப கல்வி கவுன்சிலின் ஏஐசிடிஇ பயிற்சி மற்றும் கற்றல் (எ.டி.எ.எல்) அகாடமியின் நிதி உதவியோடு செயற்கை நுண்ணறிவு வாயிலாக விவசாயத் தொழில் நுட்பமும் நவீன விவசாயத்திற்கான தீர்வுகளும் என்ற பொருண்மைமையில் உயர்கல்வி ஆசிரியர் திறன் மேம்பாட்டு பயிற்சி இம்மாதம் 25. 8 .2025 அன்று முதல் 30. 8 2025 வரை 6 நாட்கள் நடைபெற்றது.

இந்நிகழ்வின் நிறைவு விழா கல்லூரியின் தாளாளர் பி.சச்சிதானந்தன் வழிகாட்டுதலின்படி நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர்..எச்.வாசுதேவன் பிரிவுரை வாழ்த்து வழங்கினார்.

மேலும் இப்பயிற்சியில் பன்னாட்டு நிறுவனங்களில் பணிபுரியும் கல்வி வல்லுனர்கள் மற்றும் பல்வேறு கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் கல்லூரி பேராசிரியர்கள் பயிற்றுனர்களாக கலந்து கொண்டு இப்பயிற்சி குறித்த பயன்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் வணிக மேலாண்மை மற்றும் கணினி பயன்பாட்டுத் துறையின் உதவி பேராசிரியர்எம். அருள்ராஜா நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அத்துறை சார்ந்த பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

தின பூமி
நாளிதழ்
படியுங்கள்

சத்தி - மைசூர் தேசிய நெடுஞ்சாலையில்

# சிறுத்தை நடமாட்டம் வாகன ஓட்டிகள் அச்சம்: வனத்துறையினர் எச்சரிக்கை

**ஈரோடு செப் .01-**

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அடுத்த பண்ணாரி அம்மன் கோவில் அருகே சத்தி -மைசூர் தேசிய நெடுஞ்சாலை உள்ளது. இந்த வழியாக நாளொன்றுக்கு தமிழகம் -கர்நாடகா இடையே நூற்றுக்கணக்கான வாகனங்கள் சென்று வருகின்றன. அடர்ந்த வனப்பகுதியில் அமைந்துள்ள இந்த நெடுஞ்சாலையில் யானை, சிறுத்தை நடமாட்டம் இருந்து வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை சத்தியமங்கலம் பண்ணாரி அம்மன் கோவில் அடுத்த சத்தி மைசூர் தேசிய நெடுஞ்சாலையில் வழக்கம்போல் வாகன ஓட்டிகள் சென்று கொண்டிருந்தனர். நேற்று மாலை இரண்டு இருசக்கர வாகனத்தில் வாலிபர்கள் சிலர் ஆசனூர் செல்ல வேண்டி சத்தி - மைசூர் தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தனர். அப்போது வனப்பகுதி ஒட்டி தடுப்பு சுவர் அருகே சிறுத்தை ஒன்று திடீரென வெளியேறி அந்த வாலிபர்கள் சென்ற இருசக்கர வாகனங்களுக்கு ஈடாக ஓடியது. இதனால் அந்த வாலிபர்கள் மற்றும் அந்த வழியாக வந்த வாகன ஓட்டிகள் அச்சம் அடைந்தனர். சிறுத்தை பாய்ந்து ஓடுவதை அந்த வழியாக சென்ற வாகன ஓட்டுகள் தங்களது செல்போனில் வீடியோவாக பதிவு செய்து கொண்டனர். தற்போது அந்த காட்சி சமூகவலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

இதுகுறித்து வனத்துறையினர் கூறும்போது,

கடந்த சில நாட்களாகவே பண்ணாரி அடுத்த வனப்பகுதியில் சிறுத்தை நடமாட்டம் இருந்து வருகிறது. எனவே மாலை 6 மணிக்கு பிறகு வாகன ஓட்டிகள் இருசக்கர வாகனங்களில் செல்வதை தவிர்க்க வேண்டும் என்றனர்.

# பவானிசாகர் அணைக்கு 1, 248 கன அடியாக நீர்வரத்து குறைந்தது

**ஈரோடு, செப்.01-**

ஈரோடு , கரூர், திருப்பூர் மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும், 2.47 லட்சம் விளை நிலங்களின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதி இருந்து வருகிறது. நீர்ப்பிடிப்பு பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால் கடந்த சில நாட்களாகவே பவானிசாகர் அணை நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதன் காரணமாக கடந்த மாதம் 27ஆம் தேதி 100 அடியை தாண்டியது. இதனால் அணைக்கு வந்த உபரி நீர் அப்படியே பவானி ஆற்றுக்கு வெளியேற்றப்பட்டதால் பவானி ஆற்றங்கரை மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அதன் பிறகு நீர்வரத்து சீரானது.

இந்நிலையில் மீண்டும் நீர்பிடிப்பு பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக கடந்த 19ஆம் தேதி பவானிசாகர் அணை 102 அடியை எட்டியது. இதனை எடுத்து பவானிசாகர் அணைக்கு வரும் உபரிநீர் அப்படியே பவானி ஆற்றுக்கு திறந்து விடப்பட்டு உள்ளது. இதனால் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. தற்போது பவானிசாகர் அணை பகுதியில் மழை பொழிவு இல்லாததால் அணைக்கு வரும் நீர்வரத்து குறைந்துள்ளது. இதனால் அணை நீர்மட்டம் குறைந்து வருகிறது.

நேற்று காலை பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 101. 63 அடியாக குறைந்தது. அணைக்கு 1,248 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. கீழ்பவானி வாய்க்காலுக்கு 2,300 கன அடியும், தடப்பள்ளி- அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 950 கன அடியும், காலிங்கராயன் பாசனத்திற்கு 100 கன அடியும், பவானி ஆற்றுக்கு 100 கன அடியும் என மொத்தம் அணையில் இருந்து 3, 450 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதேபோல் மாவட்டத்திலுள்ள மற்ற அணையின் நீர்மட்டமும் தொடர்ந்து குறைந்து வருகிறது. அதன்படி இன்று காலை நிலவரப்படி குண்டேரி பள்ளம் அணையின் நீர்மட்டம் 20.01 அடியாக உள்ளது.இதேபோல் வரட்டு பள்ளம் அணையின் நீர்மட்டம் 21.98 ஆகவும், பெரும்பள்ளம் அணையின் நீர்மட்டம் 12.92 அடியாகவும் உள்ளது.

மாப்பிள்ளையூரணி இந்திராநகரில்

# விநாயகர் சதுர்த்தியையொட்டி மாட்டு வண்டி பந்தயம்





**கோவில்பட்டி செப்.01-**

ஒட்டப்பிடாரம் அருகே மாப்பிள்ளையூரணி இந்திரா நகரில் அமைந்துள்ள இந்திர சக்தி விநாயகர் திருக்கோவில் 35ம் ஆண்டு சதுர்த்தி விழாவை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயத்தை அ.தி.மு.க தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளரும் கோவில்பட்டி நகர் மன்ற உறுப்பினருமான எம்.ஆர்.வி.கவியரசன் கொடியசைத்து துவக்கி வைத்து வெற்றி பெற்ற காளைகள் மற்றும் சாரதிகளுக்கும் பரிசுகள் வழங்கி பாராட்டி பேசினார்.இந்த போட்டியில் தூத்துக்குடி, நெல்லை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களை சார்ந்த 64 மாட்டு வண்டிகள் சின்னமாடு, பூஞ்சிட்டு, தேன்சிட்டு, தட்டான்சிட்டு என நான்கு பிரிவுகளாக கலந்து கொண்டன

இந்நிகழ்வில் விழா கமிட்டியினர்கள் வைரமுத்து ராஜேந்திரன் ராமச்சந்திரன் தங்கமாரிமுத்து கனகராஜ் லெப்ட் கனகராஜ் மனோஜ் மாரிமுத்து ஆகியோர் வரவேற்றனர் ஊர் தலைவர் ஆறுமுகசாமி செயலாளர் தர்மலிங்கம் பொருளாளர் தங்கராஜ் பொன்னுசாமி முன்னாள் பஞ்சாயத்து தலைவர்கள் முறம்பன் சுடலைமணி கவர்னகிரி பாலமுருகன் காசிராஜா அக்ரி பெருமாள்சாமி சூரியா பாண்டியன் இன்ஜினியர் அமிர்தராஜ் சூரியா சக்தீஸ்வரன் தினேஷ்குமார் சபேஸ் மீனாட்சி மற்றும் பார்வையாளர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்

# தனி மனிதனை சமூகத்தில் உயர்த்துவது கல்வி மட்டுமே: மாணவ, மாணவிகளுக்கு கலெக்டர் ச.கந்தசாமி அறிவுரை





**ஈரோடு.செப்.01-**

ஈரோடு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், கலெக்டர் ச.கந்தசாமி ”காபி வித் கலெக்டர்” நிகழ்ச்சியில் அந்தியூர் வட்டத்திற்குட்பட்ட அரசு மற்றும் தனியார் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.

இன்றைய தினம் நடைபெற்ற காபி வித் கலெக்டர் நிகழ்ச்சியில், மாணவ, மாணவியர்கள் கல்வியறிவோடு சமூகம் மற்றும் பொது அறிவும் மேம்பட வேண்டும் என் நோக்குடன் கலெக்டர் , மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடிய போது தெரிவிக்கயை ில், அண்ணா, காமராஜர், பெரியார் போன்றோர் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு போராடிய தலைவர்கள் ஆவார்கள்.

மேலும், தமிழ்நாடு அரசின் சார்பில், மாபெரும் தமிழ் கனவு, திருக்குறள் திருப்பணிகள் திட்டம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் தமிழர் மற்றும் தமிழின் மரபு மற்றும் பண்பாடு ஆகியவற்றை குறித்து இன்றைய தலைமுறையினர் தெரிந்து கொள்ள உதவியாக இருக்கிறது. சங்ககால அகழ்வாராய்ச்சிகள் மற்றும் பானை குறிப்பேடுகளில் அதிகளவில் கிடைக்கப் பெற்ற கல்வெட்டுகளில் பெரும்பான்மையானவை தமிழ் மற்றும் தமிழர் பாரம்பரியத்தை குறிக்கின்றவையாகும்.

மேலும், மாணவ, மாணவியர்கள் உயர்கல்வியில் கற்பதற்கு ஏராளமான பாடப்பிரிவுகள் உள்ளது எனவே தங்களுக்கு விருப்பமான பாடத்தை தேர்ந்தெடுத்து படிக்கலாம்.

பள்ளி மற்றும் கல்லூரி படிப்போடு அல்லாமல் போட்டித்தேர்வுகளுக்கும் தயாராகும் வகையில் பயிற்சி பெற வேண்டும். தனி மனிதனை சமூகத்தில் உயர்த்துவது கல்வியால் மட்டுமே இயலும். அத்தகைய கல்வியை மாணவ, மாணவியர்கள் ஆர்வத்துடன் கற்க வேண்டும், மேலும் தொடர்ந்து புத்தகம் வாசிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், கலெக்டர் தனது அரசுப்பணியில் சேர்ந்த பிறகு சந்தித்த நிகழ்வுகள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் வகையில் பல்வேறு கருத்துக்களை பகிர்ந்து கொண்டதுடன், மாணவ, மாணவியர்களின் பள்ளியில் ஏற்பட்ட சுவாரசியமான நிகழ்வுகள் குறித்து கேட்டறிந்தார். காபி வித் கலெக்டர் நிகழ்ச்சியில், அந்தியூர் வட்டாரத்திற்குட்பட்ட 13 அரசுப் பள்ளிகளை சேர்ந்த 21 மாணவ, மாணவியர்கள் மற்றும் 2 தனியார் பள்ளிகளை சேர்ந்த 4 மாணவ, மாணவியர்கள் என மொத்தம் 15 பள்ளிகளை சேர்ந்த 25 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட மாணவ, மாணவியர்கள் அனைவருக்கும் கலெக்டர் திருக்குறள் புத்தகங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுப்பாராவ், ஆசிரியர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அகலார் குருகுலம் பள்ளியில் விளையாட்டு தின விழா



**ஊட்டி, செப்.01-**

நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த தூனேரி அகலாரில் உள்ள குருகுலம் பள்ளியில் பதினாறாவது ஆண்டு விளையாட்டு தின விழா மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினர்களாக சாராஸ் டிரஸ்ட் இன் நிர்வாக அறங்காவலர் மற்றும் சமூக ஆர்வலர்கள் பங்கேற்று போட்டிகளை தொடங்கி வைத்தனர்.

160 மாணவர்கள் ஹவுஸ் வாரியாக அதாவது சாமா, அதர்வா, ரிக், யசூர், என அணிவகுத்து வந்தனர். பத்தாம் வகுப்பைச் சேர்ந்த மாணவி பிரீத்தா ஸ்ரீ வரவேற்புரை வழங்கினார். விழாவில் 300 மாணவர்களும் 500 பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.பள்ளி நிர்வாக தலைவர் வாசுகி அர்ஜுனன் அவர்கள் சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார். பள்ளியின் முதல்வர் சுரேஷ் பாபு சிறப்பு விருந்தினர்களைப் பற்றிய அறிமுகவுரை அளித்தார்.

மாணவர் தலைவர் பிரீத்தா ஸ்ரீ மற்றும் துணைத் தலைவர் தர்ஷன் நான்கு ஹவுசைச் சேர்ந்த கேப்டன்கள் கீர்த்தனா, விதுனா ,சம்ரிதா, சஞ்சனா மற்றும் துணை கேப்டன்கள் தீக்ஷயா , நீக்ஷிதா ,பிரஜன் குட்டன் மற்றும் யதுநந்தன் ஆகியோர் அத்லெட்டிக் விளக்கை ஏற்றினர். மாணவர்களின் உறுதி மொழியுடன் விழா இனிதே தொடங்கப்பட்டது.

உணவு இடைவேளைக் குப் பிறகு கராத்தே நடந்தது. பிறகு பேரன்ட்ஸ் கேம் லேடிஸ் மற்றும் ஜென்ட்ஸ் காக நடத்தப்பட்டது. வெற்றி பெற்றவர்களுக்கு புத்தகம் பரிசாக வழங்கப்பட்டது.சிறப்பு விருந்தினர் பேசுகையில் காலை முதல் நடந்த நிகழ்வுகளில் அனைத்து மாணவர்களும் எல்லா நிகழ்வுகளிலும் பங்கேற்றது சிறப்பிக்கத்தக்கது என்றார்.எல்லா மாணவர்களின் திறமைகளும் வெளிவந்தது மற்றும் ஒவ்வொரு மாணவர்களின் திறமையை வெளிக்கொணர்ந்து அவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்தி இருப்பது தனக்கு மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார். குருகுலம் பள்ளியின் ஆசிரியர்கள் மாணவர்களின் உறவு என்பது ஒரு தாயின் கருவறையில் உள்ள குழந்தை எப்படி பத்திரமாக இருக்கிறதோ அப்படிப்பட்ட பாதுகாப்பை வழங்குகிறது என்றார். குருகுலம் பள்ளி கல்விக்கு மட்டுமல்லாமல் விளையாட்டிலும் முக்கியத்துவம் கொடுத்து வருவதாகவும் அது வாழ்க்கைக்கு மிகவும் வேண்டிய ஒன்றாகவும் கருதினர். விளையாட்டின் மூலமாகவும் ஒழுக்கத்தை கற்றுத் தருகிறார்கள் என்று கூறினர்.

தொடர்ந்து ஹவுஸ் வாரியான பிரமிட் நடத்தப்பட்டது. பிறகு ஏராளமான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சர்டிபிகேட் மட்டும் மெடல் மாணவர்களுக்கு கொடுக்கப்பட்டது. இதில் ஹவுஸ்வாரியாக எந்த ஹவுஸ் முதலிடம் பெற்றதோ அந்த ஹவுஸுக்கான வின்னர் ஷீல்டு வழங்கப்பட்டது. இரண்டாம் இடம் பிடித்த ஹவுஸுக்கு ரன்னர் ஷீல்ட் வழங்கப்பட்டது. மாணவர்கள் ரேங்க வாரியாக நின்று கவுண்டர் மார்ச் பாஸ்ட்டை செய்து முடித்தனர். இறுதியாக ஒன்பதாம் வகுப்பு மாணவர் தர்ஷன் நன்றியுரை வழங்கினார். எட்டாம் வகுப்பு மாணவன் சாம் ஹர்ஷித் இறுதியாக தேசிய கீதம் வாசித்தார்.

